செ.வெ.எண்: 56/ஜூன் நாள் : 21.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

# மண்டல அளவிலான உலக திறனாய்வு திட்ட தடகளப் போட்டிகள் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு மைதானத்தில் 05/07/2016 முதல் 06/07/2016 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பாக மதுரை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 8 கல்வி மாவட்டங்களுக்கு இடையேயான மண்டல அளவிலான உலக திறனாய்வு திட்ட தடகளப் போட்டிகள் இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு மைதானத்தில் 05/07/2016 முதல் 06/07/2016 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

- ஒவ்வொரு போட்டியிலும் கல்வி மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதல் இரண்டு இடம் பெற்ற வீரர், வீராங்கணைகள் கலந்து கொள்ளலாம்.
- ஒரு கல்வி மாவட்டத்திற்கு 35 விளையாட்டு வீரர்களும், 35 விளையாட்டு வீராங்கணைகளும் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- 100மீ, 200மீ, 400மீ நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் ஆகிய தடகள விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.
- ஒரு விளையாட்டு வீரர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ளவும்
- 6,7,8 ஆம் வகுப்பு படிக்கும் வீரர், வீராங்கணைகளுக்கு தனித்தனியாக போட்டிகள் நடைபெறும்
- போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கணைகள் சீருடையுடன் வர வேண்டும்
- மண்டல அளவிலான போட்டியில் முதல் 10 இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு கீழ்காணும் Minimum Norms பின்பற்றப்பட்டு அதன்படி பரிசுத்தொகை வழங்கப்படும்.

| Event | VI (Minimum Norm) | | VII (Minimum Norms) | | VII (Minimum Norms) | |
|---|---|---|---|---|---|---|
| | B | G | B | G | B | G |
| 100 mtrs | 15.2 sec | 16.2 sec | 14.2 sec | 15.8sec | 13.8 sec | 15.5 sec |
| 200 mtrs | 32.0 sec | 34.0 sec | 31.0 sec | 38.0 sec | 29.5 sec | 32.5 sec |
| 400 mtrs | 1:15.5 sec | 1:18.0 sec | 72.0 sec | 75.0 sec | 67.0 sec | 1:14.0 sec |
| Longjump | 3.80 mtrs | 3.30 mtrs | 4.00 mtrs | 3.60 mtrs | 4.20 mtrs | 3.75 mtrs |
| Highjump | 1.25 mtrs | 1.10 mtrs | 1.28 mtrs | 1.15 mtrs | 1.35 mtrs | 1.20 mtrs |
| Shotput | 6.30 mtrs | 5.00 mtrs | 7.30 mtrs | 5.30 mtrs | 8.20 mtrs | 6.00 mtrs |

- மேற்காணும் தகுதிகள் மற்றும் Minimum Norms ன்படி வெற்றி பெறுபவர்களுக்கு மட்டுமே ரூ. 6000/-க்கான காசோலைகள் அந்தந்த மாணவ, மாணவியர்களது பெயரில் மட்டுமே Cross செய்து காசோலைகள் வழங்கப்படும்.
- ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு ஆண் அணி மேலாளரும், ஒரு பெண் அணி மேலாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
- குறுகிய வழி சாதாரண பேருந்து கட்டணம் மட்டுமே வழங்கப்படும். கண்டிப்பாக பயணச் சீட்டு கொண்டு வர வேண்டும்
- கல்வி மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டியில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கணைகளின் பள்ளி தலைமையாசிரியரிடம் பிறந்த தேதிக்கான சான்றிதழ் (Bonafide) தனித்தனியாக வாங்கி போட்டிகள் நடத்தும் பொறுப்பாளர்களிடம் மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும். Bonafide சான்றிதழில் மாணவரின் பெயர், பிறந்த தேதி, Roll No / Register No மற்றும் மாணவ, மாணவியரின் புகைப்படத்துடன் (பள்ளி தலைமையாசிரியர் கையொப்பத்துடன்) சமர்ப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளில் வழங்கப்பட்ட ID Card (அடையாள அட்டை ) வைத்திருக்க வேண்டும்
- போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகள் தங்கள் பள்ளியிலிருந்து ஏற்கெனவே தேர்வு செய்து அனுப்பப்பட்ட Battery of Test படிவத்தினை கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்
- மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு இளைஞர்நல அலுவலகம்,
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
SDAT சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கம்,
இராமநாதபுரம் தொலைபேசி : 7401703509

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**